**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213083

1. District மாவட்டம் :Tirunelveli — PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption — Year: ஆண்டு 2023 — FIR No.: மு.த.அ. எண் 13/2023 — Date: நாள் 29.12.2023

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 12.12.2023 — Time to : நேரம் வரை 09.00
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.12.2023 — Time : நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.12.2023 — Time : நேரம் 08.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Union Office, Palayamkottai, Tirunelveli. 2 Km North.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.V.Kumari Pandian — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Veerapandian
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.09.1991 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Advocate — (g) Address : முகவரி Door No.4, 3rd Street, Sankar Nagar, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt.Parvathi Mallika, Extension Officer, Social Welfare Department, Palayamkottai, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Due to Complainant's delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 29.12.2023-ம் தேதி காலை 08.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திருமதி.V.குமாரி பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட பாளையங்கோட்டை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறை பிரிவில், விரிவாக்க அலுவலராக பணிபுரியும் திருமதி.பார்வதி மல்லிகா என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின்படி ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெற்று 29.12.2023-ம் தேதி 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2023 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன்.

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [signature] 29/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 29/12/23
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29/12/23 @ 09.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Robin GnanaSingh
Rank: நிலை ............... No. எண் ......
Inspector of Police
VAC, Tirunelveli.

**Continuation of Tirunelveli Vigilance and Anti-Corruption Crime No.13/2023:-**

மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் V.குமாரி பாண்டியன், த/பெ.வீரபாண்டியன், No-4, 3-வது தெரு, சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம். Cell:9600830775. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனார் காலமாகி விட்டார். எனக்கும் கலையரசன் என்பவருக்கும் 26.08.2021 அன்று திருமணம் நடைபெற்றது. தமிழக அரசின் சமுக நலத்துறையால் வழங்கப்படும் ஈவே.ரா மணியம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தின் மூலம் எனது விதவை தாயார் திருமதி.மகா லெட்சுமி அவர்கள் சார்பாக இணைய வழி மூலம் கடந்த 18.08.2021 அன்று பதிவு எண்-20210200106422 ஆக விண்ணபித்திருந்தேன். மேலும் மறுநாள் இணையவழி விண்ணப்பத்துடன் சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து பாளையங்கோட்டை ஒன்றிய அலுவலகத்தில் உள்ள சமூக நலத்துறை பிரிவில் விரிவாக்க அலுவலராக பணிபுரியும் திருமதி.பார்வதி மல்லிகா அவர்களிடம் கொடுத்தேன். பின்னர் எங்களது திருமணத்தை 17.12.2021 அன்று பதிவுத்துறையில் பதிவு செய்து அதன் சான்றிதழை மேற்படி விரிவாக்க அலுவலரிடம் கொடுத்தேன். பின்னர் எனது அம்மாவின் வங்கிக்கணக்கு புத்தகம் நகல், திருமண பதிவு சான்றிதழ் நகல் இல்லை என்று சொல்லி மீண்டும் கொண்டு வந்து கொடு என்று என்னை பலமுறை அலைக்கழித்தார். நானும் அவர்கள் கேட்ட போது எனது அம்மாவின் பாஸ்போட் சைஸ் புகைப்படம் உட்பட எல்லா ஆவணங்களையும் நேரில் கொண்டு கொடுத்தேன். இந்நிலையில் 11.12.2023 இரவு சுமார் 7.30 மணியளவில் மேற்படி விரிவாக்க அலுவலர் திருமதி.பார்வதி மல்லிகா அவரது அலைபேசி எண்-9150058032 எண்ணில் இருந்து எனது அலைபேசி எண்-9600830775-க்கு தொடர்பு கொண்டு கூடிய விரைவில் ஈ.வே.ரா மணியம்மையார் நினைவு திருமண உதவி திட்ட தொகை எங்களுக்கு வழங்க இருப்பதாகவும், அதற்காக மறுநாள் 12.12.2023 அன்று காலை 8 மணி அள்வில் பாளையங்கோட்டை ஒன்றிய அலுவலகத்தில் வந்து தன்னை சந்திக்குமாறும் அப்போது ரெவினியூ ஸ்டாம்ப், தாயாரின் வங்கிக் கணக்கு புத்தகம், பாஸ்போட் அளவு புகைப்படம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு அம்மாவையும் உடன் அழைத்து வந்து கையெழுத்துப் போடவேண்டும் என்றும் சொன்னார். அதன்படி நானும் 12.12.2023ம் தேதி காலை சுமார் 9 மணியளவில் பாளையங்கோட்டை ஒன்றிய அலுவலகத்திற்கு எனது தாயாரை அழைத்துச் சென்று, அவரை சந்தித்து மேற்படி ஆவணங்களை கொடுத்த போது இவை எல்லாம் தேவையில்லை என்றும், இந்த ஆவணங்கள் எல்லாம் என்னிடம் ஏற்கெனவே உள்ளது என்றும் கூறி எனது தாயாரை மட்டும் அவர் வைத்திருந்த ரிஜிஸ்டரில் கையொப்பம் செய்யச் சொன்னார். அவர் சொன்னதன் பேரில் எனது தாயார் கையெழுத்து செய்தார். அப்போது மேற்படி விரிவாக்க அலுவலர் திருமதி.பார்வதி மல்லிகா என்னிடம் உங்களுக்கு விரைவில் பணம் கிடைத்துவிடும் என்றும், தாலிக்கு தங்கமும் விரைவில் நிகழ்ச்சி வைத்து

கொடுத்து விடுவோம் என்று சொல்லி அதற்கு ஏற்பாடு செய்வதற்கு தனக்கு ரூபாய்-2,500/- தர வேண்டும் என்று சொன்னார். நான் எதற்காக பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு பணம் தரவில்லை என்றால் உங்கள் விண்ணப்பத்தை பெண்டிங் வைத்து விடுவேன் என்று சொன்னார். அதனால் வேறு வழியில்லாமல் நானும் சரி என சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர் என்னை பலமுறை அவரது அலைபேசியில் இருந்து தொடர்பு கொண்டு எப்போது பணம் தருவீர்கள் என்று கேட்டு வந்தார். நானும் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி சமாளித்து வந்தேன். இந்நில்லயில் 26.12.2023-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் அவரது அலைபேசியில் இருந்து என்னை தொடர்புகொண்டு பணம் கொண்டு வரேன், வரேன் என்று சொல்லி ஏமாற்றிகிட்டே இருக்க என்றும் இந்த வாரத்திற்குள் அலுவலகம் வந்து கண்டிப்பாக பணம் தர வேண்டும் என்றும் உறுதியாக கூறினார். நானும் அப்போது வேறு வழியில்லாமல் சரியென சொன்னேன். பின்பு நான் யோசித்து பார்த்தபொழுது அரசின் உதவித்தொகை பெற்றுத் தரும் அரசு வேலை செய்வதற்கு லஞ்சமாக ரூபாய்-2,500/- கேட்கிறாரே என்று எனது மனம் சங்கடப்பட்டது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே இன்று 29.12.2023-ம் தேதி இது சம்மந்தமாக புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் திருமண உதவித்தொகை பெற்றுத்தர லஞ்சம் கேட்ட விரிவாக்க அலுவலர் திருமதி.பார்வதி மல்லிகா மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd. (V.குமாரி பாண்டியன்) 29.12.2023.

Sir, Received this complaint today on 29.12.2023 at 08.30 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission and I registered a case in Tirunelveli V&AC Cr.No.13/2023 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 today on 29.12.2023 at 09.00 hrs. sd. D.Robin Gnanasingh, 29.12.2023. Inspr., of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

29/12/23
D Robin Gnanasingh
Inspr. of Police
V&AC, TIN